திங்கள், அக்டோபர் 8, 2018

# சாரதா கல்லூரியில் சக்தி பூஜை

■ திருநெல்வேலி

தாமிரபரணி மஹா புஷ்கரம் விழா மற்றும் நவராத்திரியை முன்னிட்டு திருநெல்வேலி அரியகுளம் ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரியில் நாளையும், நாளை மறுநாளும் (அக்.9,10) 'சக்தி பூஜை' நடைபெறுகிறது. இதில் தாமிரபரணி உற்பத்தியாகும் பொதிகை மலையை மையப்படுத்தி பிரம்மாண்ட கொலு வைத்து வழிபாடு நடைபெறுகிறது. ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்தின் சாதுக்கள் சிறப்பு பூஜை நடத்துகின்றனர். பொதுமக்கள் இதில் குடும்பத்தினருடன் பங்கேற்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.